# உயிர்த்தெழுதலின் வல்லமை [25:13-27]

*நான் பல பேராலயங்களைச் சென்று பார்த்திருக்கிறேன், ஆனால் அவைகளில் இலண்டனில் உள்ள வெஸ்ட்மினிஸ்ட் டர் அபே பேராலயமே மிகவும் வசீகரமானதாகும். என்னைப் பொறுத்தமட்டில் அது அங்கு நடந்த முடிசூட்டு விழாக்களி னால் அல்ல, ஆனால் புகழ்பெற்ற மக்கள் அங்கு புதைக்கப் பட்டதினாலேயே அது குறிப்பிடத் தக்கதாக இருக்கின்றது: பிரபுக்கள், அரசியல் தலைவர்கள், இராணுவப் பெருவலி வாளர்கள், புகழ்மிக்க கலைஞர்கள் ஆகியோர் அங்கு புதைக்கப் பட்டுள்ளனர். அங்கு தன்னுணர்வு நிலைகள் மற்றும் பொழுது போக்குக் கலைகள் பல பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ளன, ஆனால் அங்குள்ள கல்லறைகள் எல்லாவற்றிலும் பொதுவான தாக ஒன்று காணப்படுகின்றது: அவை ஒவ்வொன்றின் மீதும், "இங்கு உள்ள ... ன் சரீரம்" என்று புகழ் பெற்ற ஒருவரின் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கும். வால்ட்டர் B. நைட் அவர்கள் பின்வருவதைக் கவனித்துள்ளார்:*

> *இயேசுவின் கல்லறையில் எவ்வளவு மாறுபாடு இருந்தது. அங்கு, "இவ்விடத்தில் உள்ளது இயேசுவின் சரீரம்" என்று எழுதப்பட்டிருந்ததில்லை, ஆனால் தேவ தூதனின் கூற்றில், ''அவர் இங்கு இல்லை: ஏனெனில் அவர் உயிர்த்தெழுந்தார்'' என்று கூறப்பட்டது. பூமிக்குரிய மாபெரும் தன்மைகள் யாவும் அநேகமாகக் கல்லறை யுடன் முடிந்து விடுகின்றன. இயேசு வல்லமையைச் செயல்படுத்தத் தொடங்கிய மாபெரும் செயலானது கல்லறையில் அவர் மரணத்தை வெற்றி கொண்ட போது தொடங்கியது.*

*இயேசுவின் உயிர்த்தெழுதலே பவுலின் பிரசங்கத்தில் மையநோக்காக இருந்தது. அத்தேனே பட்டணத்தில் அவர், "இயேசுவையும் உயிர்த்தெழுதலையும்" (17:18ஈ) பிரசங்கித்*

தார். ரோமர்களுக்கு அவர் "கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்" (ரோமர் 8:34ஆ) என்று கூறினார். கொரிந்தியர்களுக்கு அவர், "கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்" (1 கொரி. 15:17) என்று எழுதினார்.

எனவே அதிகாரங்கள் 23 முதல் 26 வரையுள்ள பவுலின் "தற்காப்பு வாதங்கள்" யாவற்றிலும் உயிர்த்தெழுதல் என்பது மையக் கருத்தாயிருப்பதைக் காண்பதில் நாம் வியப்படைவதில்லை. நான்கு "விசாரணைகளிலும்"[1] அவர் உயிர்த்தெழுதலை வலியுறுத்தினார்: "விசாரணை" எண் ஒன்றில், சனதெரின் சங்கத்தாரிடம் பவுல், "மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கையைக் குறித்து நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன்" என்று சத்தமிட்டுச் சொன்னார் (அப். 23:6ஈ). இரண்டாவது விசாரணையின்போது பேலிக்ஸிடத்தில் பவுல், "உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக் கொள்ளுகிறேன்; அதென்னவென்றால், ... எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து ... நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று ... நம்பிக்கை கொண்டிருக்கிறேன்" (24:14, 15) என்று கூறினார். மூன்றாவது விசாரணை நடத்தப்படுகையில் இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றிய பவுலின் முன் வைத்தலானது மிக வல்லமையுள்ளதாயிருந்தது. எப்படியென்றால், பெஸ்து அதைப் புரிந்து கொள்ளாதிருந்தாலும் அவரது மனதில் அது தாமதமற்ற பதிவை ஏற்படுத்தியது (25:19). நமது அடுத்த பாடத்தில் நாம் நான்காவது "விசாரணை" யைப் படிப்போம். அதில் அகிரிப்பா மற்றும் தனிச்சிறப்பு வாய்ந்த விருந்தினர்கள் ஆகியோரிடத்தில் பவுல், "தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியமென்று நீங்கள் எண்ணுகிறதென்ன?" என்று கேட்டார் (26:8; 26:22, 23ஐயும் காணவும்).

அதிகாரம் 23 முதல் 26 வரையுள்ள பகுதியில் நாம் உயிர்த்தெழுதலை எடுத்து விட வேண்டியதாயிருந்தால், ரோமக் குடிமகன் ஒருவர் தவறாக நடத்தப்பட்ட வரலாற்றையே நாம் பெற்றிருப்போம். ஏனென்றால் அதில் உள்ளடங்கியுள்ள உயிர்த்தெழுதலானது பவுலின் வாழ்வில் சக்தியுள்ள சாட்சியாக வல்லமை செலுத்துவதை நாம் காண்கின்றோம். "[இந்த அதிகாரங்களின்] ஒன்றுபட்ட நோக்கமாக இருப்பது

*என்னவென்றால், உயிர்த்தெழுதல் மற்றும், நமது வாழ்வின் மிகத் துன்பம் நிறைந்த நேரங்களில், வெற்றி மிக்க நமது கர்த்தர் நம்மைப் பெலப்படுத்தித் தைரியப்படுத்தச் செய்யக் கூடிய தென்ன என்பதில் உள்ள நம்பிக்கை ஆகியவைகளேயாகும்."[2]*

*அதிகாரம் 21ல் இருந்து, பவுல் தமது வாழ்விலேயே மிகக் கடினமான சில விசாரணைகளை எதிர் கொண்டார். இந்தப் பாடத்தில், உயிர்த்தெழுந்த கர்த்தர்மேல் பவுலின் விசுவாச மானது இந்த விசாரணைகளில் அவரை எப்படிப் பலப்படுத் தியது - மற்றும் அத்தகைய விசுவாசமானது நாம் வெற்றி யடையவும் எவ்விதம் உதவ முடியும் என்பவைகளை நாம் காண விரும்புகின்றோம். பவுல் அகிரிப்பா அரசர் முன்னிலை யில் தமது தற்காப்பு வாதத்தை மேற்கொள்ளும்படி வழி நடத்திய நிகழ்ச்சிகளே நமது பாடத்தின் பின்னணியாக இருக்கும்.*

## *குழப்பமடைந்த நிர்வாகி (25:13-23)*

*பவுல் செசாருக்கு அபயமிட்ட பிறகு, பெஸ்து அவரை (பவுலை) ரோமாபுரிக்கு அனுப்புமுன் பாதுகாப்புடன் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தார். இந்த ஏற்பாடுகள் செய்யச் சற்று காலமாகியிருக்கும்; அவர்கள் ரோமாபுரிக்குச் செல்லும் கப்பல் ஒன்றைக் காண வேண்டியிருந்தது, மற்றும் ஒரு பாதுகாப்பு அலுவலரை ஏற்படுத்த வேண்டியிருந்தது (27:1). பணித் திறன் என்ற பெயரில், பல கைதிகளை ஒரே முறையில் கொண்டு செல்வதற்காக அலுவலர்கள் காத்திருப்பது வழக்க மாகும் (27:1). இருப்பினும் பெஸ்துவைப் பொறுத்தமட்டில், பேரரசருக்கு அறிக்கையொன்றை எழுதுவது என்பதே தயாரிப்புப் பணிகளில் மிகக் கடினமான செயலாக இருந்தது.*

### *இராஜரீக பார்வையாளர்கள் (வ. 13, 14)*

*ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கையில், பெஸ்துவிடத்தில் இராஜரீகப் பார்வையாளர்கள் இருவர் வந்தார்கள்: "அகிரிப்பா இராஜாவும் பெர்னீக்கேயாளும் பெஸ்துவைக் கண்டுகொள்ளும்படி செசரியாவுக்கு வந்தார்கள்" (வ. 13).*

*அகிரிப்பா இராஜா[3] என்பவர், யாக்கோபுவைக் கொலை செய்து, பேதுருவைக் கொலை செய்ய முயற்சி செய்திருந்த ஏரோதுவின்[4] மகன் ஆவார் (12:1-4). பெர்னீக்கேயாள் அவரது (அகிரிப்பா இராஜாவின்) சகோதரியாவாள். அதிகாரம் 24ல் நாம் தேசாதிபதிக்கு மணம் முடித்துத் தரப்பட்டிருந்த துருசில்லாள் என்ற இன்னொரு சகோதரியைச் சந்தித்தோம் (வ. 24). நாம் படிக்கின்ற இவ்வரலாறு நடந்த சமயம் அகிரிப்பா ஏறக்குறைய முப்பத்தி இரண்டு வயதுடையவராகவும், பெர்னீக்கேயாள் அவரைக் காட்டிலும் ஒரு வயது இளைய வளாகவும் இருந்தனர்.*

*அகிரிப்பாவுக்கு "இராஜா" என்ற பட்டப்பெயர் இருந்த தால் அவர் பெஸ்துவுக்கு மேலானவர் போலக் காணப் படலாம், ஆனால் இதற்கு எதிர்க் கருத்துதான் உண்மை யானதாக இருந்தது. அந்தப் பட்டத்தை அகிரிப்பா தமது தந்தையிடமிருந்து வாரிசுரிமையாகப் பெற்றிருந்தும், தமக் கென்று இராஜ்யப் பகுதி எதையும் பெறாதிருந்தார். அவர் யூதேயாவின் வடகிழக்குப் பகுதியில் இருந்த ஒரு சிறிய பகுதிக்கு முக்கியமற்ற வகையில் ஒரு அரசராக இருந்தார். உயர்ந்த பதவியில் இருக்கும் ரோம அதிகாரியுடன் உறவு கைளை வளர்த்துக் கொள்வது என்பது அவருக்கு (அகிரிப்பா வுக்கு) அனுகூலமானதாக இருந்தது. ஆகையால் பெஸ்து தமது நிர்வாகப் பணியைத் தொடங்கியபோது, அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் அவரை "வரவேற்பதற்கென்று" ம் (25:13;* RSV*) மற்றும் அவர் நியமனம் பெற்றதற்காக பாராட்டுவதற் கென்றும் வந்தார்கள்.*

*அகிரிப்பா மற்றும் பெர்னீக்கேயாள் ஆகியோருக்கு செசரியாவுக்குப் பயணமாகுதல் என்பது வீட்டுக்கு வருதல் என்பது போன்றதாகும். அந்த நகரமானது அவர்களின் தாத்தா வினுடைய தகப்பனாரான பெரிய ஏரோதுவினால் கட்டப் பட்டதாயிருந்தது. கட்டிடத்தின்பால் ஏரோது கொண்டிருந்த பெரு விருப்பத்தின் ஆதாரங்கள் எல்லா இடத்திலும் காணப் பட்டன: மாபெரும் சலவைக் கல் மாளிகைகள், சிறப்பு வாய்ந்த சலவைக்கல் நடைபாதைகள் மற்றும் சிலைகள் ஆகியவை நகர் முழுவதிலும் காணப்பட்டன. செசரியாவானது அவர்களது தகப்பனாரின் ஆளுகையினுடைய தலைநகரமாகவும் இருந்தது. அவர் அரசாட்சியில் பெரிய ஏரோதுக்குப் போட்டி*

*யாளராகவும், ஒருவேளை அந்த ஆட்சியைக் காட்டிலும் மேம்பட்டதாகவும் இருந்தது. அகிரிப்பாவும் பெர்னீக்கே யாளும் கடைசியில் அரண்மனையைச் சென்று சேர்ந்த பொழுது, கசப்பும் இனிப்புமான நினைவுகள் அவர்களின் எண்ணங்களில் பெருக்கெடுத்திருக்க வேண்டும். இது அவர்களின் குழந்தைப் பருவ வீடாக இருந்தது. மற்றும் இது, பதினைந்து வருடங்களுக்கு முன்பு அவர்களின் தகப்பனார் சித்திரவதைப்பட்டு மரணமடைந்திருந்த இடமாகவும் இருந்தது (12:20-23).*

*அவர்கள் அங்கு வந்த செயல் என்பது இயேசு கூறியிருந்த தீர்க்கதரிசனம் ஒன்றின் நிறைவேற்றமாகும் என்று அவர் களுக்குக் கூறப்பட்டிருந்தால், அவர்கள் திகைப்படைந்திருப் பார்கள்:*

> *மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக் கொடுத்து, தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள். அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் சாட்சியாக என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டுபோகப்படுவீர்கள் (மத். 10:17, 18).*

*பவுல் (பேலிக்ஸ் மற்றும் பெஸ்து ஆகிய) அதிபதிகளுக்கு முன் நின்று பேசியிருந்தார்; இப்பொழுது தேவன் அவரை ஒரு அரசர் முன் நின்று பேசும்படியான அமைப்பைச் செய்து கொண்டிருந்தார்.*

*அகிரிப்பா மற்றும் பெர்னீக்கேயாளின் குடும்பப் பெயருக்காகவும்[5] யூதேயாவின் மார்க்க வாழ்வில் அரசரது பங்கிற்காகவும்[6] பெஸ்து அவர்களை இதமாக வாழ்த்தியிருப் பார் என்பது உறுதியானதாகும். சில நாட்கள் கடந்த போது, தேசாதிபதி அகிரிப்பாவை அறிந்து கொண்ட நிலையில், அந்த இளம் அரசரின் வருகை தமக்குப் பயனுள்ளதாய் இருக்கும் என்று நினைத்தார். ஒருவேளை அகிரிப்பா அவருக்கு, அரண் மனையில் சிறை வைக்கப்பட்டிருந்த கூடாரம் செய்பவரான ஒரு சிறிய யூதரைப் பற்றிய புதிரான விஷயம் குறித்த உள்ளுணர்வைக் கொடுத்திருக்க வேண்டும். துருசில்லாளைப் போலவே (24:24), அகிரிப்பாவும் கூட யூத அரசியான மரியம்*

*என்பவளின் வழித் தோன்றலாகவே இருந்தார், அவரும் ஒரு யூதர் என்றே கருதப்பட்டார். யூத விஷயங்களைப் பொறுத்த மட்டில் அவர் ரோமாபுரியின் குடிநிலை வல்லுநராக இருந்தார் (26:3, 27ஐக் காணவும்). இவ்விதமாக, அகிரிப்பாவும் பெர்னீக் கேயாளும் "அங்கே அநேக நாள் சஞ்சரித்திருக்கையில், பெஸ்து பவுலின் சங்கதியை ராஜாவுக்கு விவரித்து ..." (25:14அ).[7]*

***ரோமானியக் காட்சிக் கோணம் (வ. 14-21)***

*பெஸ்துவின் விபரக் கூற்றானது, இவ்வழக்கை நாம் ஒரு ரோமானியக் காட்சிக் கோணத்தில் காண குறிப்பாக யூதம் மற்றும் கிறிஸ்தவம் பற்றி அறிந்திராத ஒருவரின் காட்சிக் கோணத்தில் காண அனுமதிக்கின்றது. பேசுபவரைச் சிறந்த நிலையில் இருத்திக் காட்ட, உண்மைகள் எவ்விதம் பெருக்கிக் கூறப்படலாம் என்பதற்கு அவரது வார்த்தைகளானவை ஒரு பாடமாக உள்ளன.[8]*

> *பேலிக்ஸ் காவலில் வைத்துப்போன ஒரு மனுஷன் இருக்கிறான். நான் எருசலேமில் இருந்தபோது, பிரதான ஆசாரியர்களும் யூதருடைய மூப்பர்களும் அவனைக் குறித்து என்னிடத்தில் பிராது பண்ணி, அவனுக்கு விரோதமாகத் தீர்ப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் பிரதியுத்தரமாக: குற்றஞ்சாட்டப்பட்ட மனுஷன் குற்றஞ்சாட்டினவர் களுக்கு முகமுகமாய் நின்று, சாட்டின குற்றத்துக்குத் தனக்காக எதிருத்தரவு சொல்ல அவனுக்கு இடங்கிடைக் கிறதற்கு முன்னே, குற்றஞ்சாட்டினவர்கள் பட்சமாய் அவனை மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கிறது ரோமருக்கு வழக்கமல்ல என்றேன். ஆகையால் அவர்கள் இங்கே கூடி வந்தபோது, நான் எவ்வளவும் தாமதம் பண்ணாமல், மறுநாள் நியாயாசனத்தில் உட்கார்ந்து, அந்த மனு ஷனைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டேன். அப்பொழுது குற்றஞ்சாட்டினவர்கள் வந்து நின்று, நான் நினைத்திருந்த[9] குற்றங்களில் ஒன்றையும் அவன்மேல் சுமத்தாமல், தங்களுடைய[10] மார்க்கத்தைக்[11] குறித்தும், மரித்துப் போன இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக் கிறானென்று பவுல் சாதித்ததைக் குறித்தும் சில தர்க்க விஷயங்களை அவன் பேரில் விரோதமாய்ச் சொன்னார்கள் (வ. 14ஆ-19).*

*பெஸ்துவின் அறியாமையைக் குறித்து அகிரிப்பா புன்முறுவல் செய்திருக்க வேண்டும். இருப்பினும், பெஸ்து குழப்பமடைந்திருந்தாலும் இரண்டு உண்மைகளைப் பகுத் தறிந்திருந்தார்: முதலாவது, அவ்விஷயம் மார்க்கரீதியானது தானே தவிர, அரசியல் ரீதியானதல்ல. கல்லியோன் யூதரிடத் தில் கூறியிருந்தபடியாகவே "இது சொற்களும், நாமங்களும், [அவர்கள்] வேதத்துக்கும் அடுத்த தர்க்கமாக'' இருந்தது (18:15அ). பெஸ்து, ''ஒரு மார்க்கம் என்பது இன்னொரு மார்க்கத்தைப் போன்றே நல்லதாகும்'' என்ற சுலோகத்தை ("அவைகளில் எதுவும் அதிகம் பயனுடையதல்ல" என்ற கூடுதல் வார்த்தைகளுடன்) ஏற்கனவே தயாராக வைத்திருப்பார். பொது அலுவலகத்தில் உள்ள மற்ற பலரைப் போலவே, தேசாதிபதியும் கூட, மார்க்க விஷயங்களை அறியாதவராயும், அவ்வழியிலேயே நிலைத்திருப்பதென்று தீர்மானித்தவராகவும் இருந்தார்.*

*இருப்பினும், இயேசு என்ற பெயருடைய ஒருவர் உயிரு டன் இருந்தாரா இல்லையா என்பதே இந்த முரண்பாட்டின் மையமாகும் என்பதையும் பெஸ்து உணர்ந்திருந்தார். இந்த வாக்குவாதத்தின் அடிப்படை நிலை பற்றிய பெஸ்துவின் கணிப்பை நான் வாசிக்கையில், அதைப்பற்றி என் மனதில் ஒரு ஆழ்பதியும், சோர்வும் உண்டாகின்றது. "இயேசு உயிருடன் இருக்கிறாரா? அல்லது மரித்து விட்டாரா?" என்ற கேள்வியின் சிறப்புத் தன்மையைப் புரிந்து கொள்ளுமளவுக்கு தேசாதிபதி புத்திக் கூர்மையுள்ளவராய் இருந்தது என் மனதில் ஆழப்பதிந் துள்ளது: கிறிஸ்தவர்களென்று, அதிலும் பிரசங்கியார் களென்றும் தங்களை உரிமைகோரிக் கொள்கிறவர்களில் பலரும் கூட உயிர்த்தெழுதலைத் திறவுகோல் விஷயம் என்று நினைப்பதில்லை.[12]*

*அதே வேளையில், இந்த விஷயத்தை "... மரித்துப் போன இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறானென்று பவுல் சாதித்ததைக் குறித்தும் சில தர்க்க விஷயங்கள்" என்று பெஸ்து விலக்கித் தள்ளிய அக்கறையற்ற (ஏறக்குறைய விளையாட்டுத் தனமான) வழியைக் குறித்து நான் சோர்வடைகின்றேன். இவ்விதமாக, ''ரோம நியாயாதிபதியொருவர் கிறிஸ்தவ மார்க்கத்தின் மிகவும் மகிமைக்குரிய சத்தியத்தைப் பேச முடிந்தது."[13] மண்புழுவொன்று வைரத்தைக் குறித்தோ அல்லது*

*பன்றியொன்று நட்சத்திரங்களைக் குறித்தோ காட்டுகின்ற பாராட்டைத்தான் தேசாதிபதி உயிர்த்தெழுதலைப் பற்றிக் காண்பித்தார். ஆர்வமுள்ள சிந்தையும், திறந்த இருதயமும் இல்லாததால் பெஸ்து எவ்வளவு தவறவிட்டவராய் இருந்தார்!*

*தொடர்ந்து நாம் அவர், "பவுலின் சங்கதியை ராஜாவுக்கு விவரித்ததை" கவனிப்போம்: "இப்படிப்பட்ட தர்க்க விஷயங் களைக் குறித்து எனக்குச் சந்தேகமிருந்தபடியினால்: நீ எருசலேமுக்குப் போய், அங்கே இவைகளைக் குறித்து நியாயம் விசாரிக்கப்பட உனக்குச் சம்மதியா என்று கேட்டேன்" (25:20). (தமது நோக்கம் யூதர்களுக்குத் தயவு செய்வதே [வ. 9] என்பதைப் பெஸ்து குறிப்பிடாது விட்டு விட்டார்.) "அதற்குப் பவுல், தான் இராயருக்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்படும் படிக்கு நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்று[14] அபயமிட்ட போது, நான் அவனை இராயனிடத்திற்கு அனுப்புமளவும் காவல் பண்ணும்படி கட்டளையிட்டேன் என்றான்" (வ. 21).*

*''சந்தேகமிருந்தபடியால்'' என்ற சொற்றொடரானது பெஸ்துவின் மனநிலையைப் பொதுவாக விளக்குவதற்குப் பயன்பட்டிருக்கக் கூடும் (வ. 26, 27ஐக் காணவும்). அந்த இளம் அரசர் தமக்கு கருத்து எதுவும் தர முடியும் என்று அவர் நம்பியிருந்தார்.*

***குறிப்பிடத்தக்க வேண்டுகோள் (வ. 22, 25-27)***

*பவுலைப் பற்றிக் குறிப்பிடப்பட்டதினால் அகிரிப்பாவின் ஆர்வமானது எழுப்பப்பட்டிருக்க வேண்டும். இயேசுவைப் பின்பற்றியவர்கள் பெஸ்துவினால் அறியப்படாதிருந்தாலும், அகிரிப்பாவினால் அறியப்பட்டிருந்தார்கள். ஏரோதுவின் கொடூரமான வரலாறானது கிறிஸ்தவம் பரவுதல் பற்றிய ஆசீர்வாதமான வரலாற்றுடன் இணங்கத்தகாத வகையில் பிணைந்திருந்தது. அகிரிப்பா பலஸ்தீனத்தில் வாழ்ந்திருந்ததால் கிறிஸ்தவத்திற்காக வாதாடியவர்களில் மிகச் சிறந்தவரென்று அறியப்பட்டிருந்த இந்த "கொள்கை துறந்த யூதரைப்" பற்றிக் கேள்விப்பட்டிருப்பார் (26:26ஐக் காணவும்). பவுல் பிரசங்கித் ததைக் கேட்பதற்கு இந்த அரசர் ஒருபொழுதும் ஜெப ஆலயத் திற்கு சென்றிருக்க மாட்டார், ஆனால் அவர் எதிர்த்து நிற்க முடியாத வாய்ப்பாக முதல் தகவல் பெறுதலை அவர் இங்கு வாய்ப்பாகப் பெற்றிருந்தார். ''அப்பொழுது அகிரிப்பா*

*பெஸ்துவை நோக்கி: 'அந்த மனுஷன் சொல்லுகிறதை நானும் கேட்க மனதாயிருக்கிறேன்' என்றான்'' (25:22அ). பவுல் கூறுவதைக் கேட்க விரும்பியதற்கு அகிரிப்பாவிடம் அநேக தூண்டுதல்கள் இருந்திருக்கலாம் - அறிந்து கொள்ளும் ஆர்வம், நாட்டைப் பார்க்க வந்த பணியின் மனச் சோர்வை அகற்றுதல் முதலியன - ஆனால் அவரது இருதயத்தின் ஒரு சிறு மூலையில் இயேசுவைப் பற்றி அறியும் ஆர்வம் நிலை கொண்டிருக்க வேண்டும்.*

*அகிரிப்பாவின் வேண்டுகோளை நிறைவேற்ற பெஸ்து மகிழ்வுடன் இருந்தார். அதை நிறைவேற்றி வைப்பதன் மூலம் அவர் (பெஸ்து) தம் சொந்த திட்டத்தில் பல விஷயங்களைச் சாதித்துக் கொள்ள முடியும்: (1) தமது விருந்தினர்களுக்கு மதிப்பளித்தல். (2) அவர்களுக்கு இன்னொரு நாள் பொழுது போக்குத் தருதல் (ஒவ்வொரு நாளும் ஒரு புதுமையான காரியத்தைத் தருவது என்பது மிகக் கடினமானதாயிருந்தது). (3) தம்மையே பாதுகாத்துக் கொள்ளுதல் (ரோமாபுரியினால் தொந்தரவு எதுவும் ஏற்பட்டால், பவுலின் விஷயத்தில் நீதியைச் செலுத்த அவரால் முடிந்த அளவு சிறந்த முறையில் செயலாற்றினார் என்று சாட்சியளிக்க நன்கறியப்பட்டவரான ஒரு சாட்சியை அவர் பெற்றிருந்தார்).*

*மிக முக்கியமாக, தேசாதிபதி ரோமாபுரிக்குத் தமது அறிக்கையை எழுதுவதற்கு உதவி பெறலாம் என்று நம்பிக்கையாய் இருந்தார்.[15] உண்மையில் பெஸ்து என்ன எழுதுவது என்ற கருத்து எதுவும் கொண்டிருக்கவில்லை. பிற்பாடு அவர் அகிரிப்பா மற்றும் இருந்த தம்முடைய விருந்தினர்களிடத்தில் பின்வருமாறு ஒப்புக் கொண்டார்:*

> *இவன்தானே இராயனுக்கு அபயமிட்டபடியினாலும், அவரிடத்தில் இவனை அனுப்பும்படி தீர்மானம் பண்ணினேன். இவனைக் குறித்து ஆண்டவனுக்கு எழுதுகிறதற்கு நிச்சயப்பட்ட காரியமொன்றும் எனக்கு விளங்கவில்லை. காவல் பண்ணப்பட்ட ஒருவன் செய்த குற்றங்களை எடுத்துக்காட்டாமல் அனுப்புகிறது புத்தியீனமான காரியமென்று எனக்குத் தோன்றுகிறபடியினாலே, இவனை விசாரித்துக் கேட்ட பின்பு எழுதத்தக்க விசேஷம் ஏதாகிலும் எனக்கு விளங்கும்படி, இவனை உங்களுக்கு முன்பாகவும், விசேஷமாய்*

அகிரிப்பா ராஜாவே, உமக்கு முன்பாகவும் கொண்டு வந்தேன் என்றான் (வ. 25:25ஆ-27).

எழுதுவதற்குப் பெஸ்துவிடம் ஒரு விஷயமும் இல்லை என்பது பிரச்சனையாய் இராமல் அவர் எழுதுவது ரோமா புரியில் மதியுள்ளதாய்க் கருதப்பட வேண்டுமே என்பதுதான் பிரச்சனையாயிருந்தது. அவர் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கொண்டிருந்தார். அவர் பேரரசர் ஆர்வம் காட்டாத வகையி லான குற்றச்சாட்டுகளைக் கொண்டிருந்தார். ஆகையால் அவர் அகிரிப்பாவிடம் விரைவாக, "... நாளைக்கு நீர் கேட்கலாம்" (வ. 22ஆ) என்று உறுதி கூறினார்.

**அரச சபைக்கூட்டம் (வ. 23)**

வசனம் 23ல் பின்வருமாறு கூறப்படுகின்றது:

> மறுநாளிலே அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்துடனே[16] சேனாபதிகளோடும் பட்டணத்துப் பிரதான மனுஷரோடுங் கூட நியாய ஸ்தலத்தில் பிரவேசித்தார்கள். உடனே பெஸ்துவினு டைய கட்டளையின்படி பவுல் கொண்டு வரப்பட்டான்.

இக்காட்சியை உங்கள் மனதில் சித்தரித்துக் கொள்ளுங்கள்: நியாயஸ்தலம் என்ற அவ்விடமானது பெரிய ஏரோதினால் கட்டப்பட்ட ஆடம்பரமான ஒரு பெரிய கூடமாய் இருந் திருக்க வேண்டும். "கனத்த திரைச் சீலைகள் ... சுவர்களை அலங்கரிக்க, சலவைக்கல் தூண்கள் அழகுறக் கவிந்திருந்த கூரையைத் தொடும்படியாக மேலோங்கியிருந்தன."[17] அந்த அறையானது கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக் கப்பட்டிருந்தது மற்றும் அலங்காரமான ஆடம்பர உடைகள் அணிந்திருந்த மக்களால் நிரம்பியிருந்தது.[18] சுற்றிலும் இருந்த சுவர்களை ஒட்டி, "ரோமாபுரியின் உயர்ந்த சேனைகளைச் சேர்ந்த சடங்காச்சாரக் காவல் படையின் வீரர்கள் குழுவானது நின்று கொண்டிருந்தது."[19]

எக்காள சத்தத்துடன் நளினமான அணிவகுப்பானது அந்தக் கூட்டத்தினுள் வந்து குவிந்தது. முதலாவதாக அப்பகுதியில் புகழ் வாய்ந்த மனிதர்கள் - குடிமை மற்றும்

வியாபாரத் தலைவர்கள் - வந்தார்கள், அவர்களுடன் ரோமாபுரியின் வல்லமை வாய்ந்த படைத் தலைவர்கள் ஐந்து பேர் வந்தார்கள்.[20] எக்காளங்கள் இருமுறை ஒலித்த பிறகு, பெஸ்து தம்முடைய புகழ்மிக்க விருந்தினர்களை வரவேற்றார். அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் ஆடம்பரமான உடைகள் உடுத்தியிருந்தார்கள். அவர்களின் பின்புறத்தில் இரத்தாம்பர உடைகள் அணிந்து, தலைகளில் தங்க கிரீடங்கள் சூடியிருந் தார்கள். பெர்னீக்கேயாளின் தலைமுடி மற்றும் மணிக்கட்டில் அணிந்திருந்த மின்னலடிக்கும் ஆபரணங்களினால் அவளது அழகு கூடியிருந்தது. அதற்குச் சற்றும் குறைவற்ற வகையில் பெஸ்து தேசாதிபதிக்குரிய தமது செவ்விய உடையில் இருந்தார். இவ்வுடையை அவர் நாட்டின் முக்கிய நிகழ்ச்சி களின்போது அணிவது வழக்கமாகும். அது மின்னுகின்ற, பகட்டான, உலக மகிமைக்குரிய ஆடையாய் இருந்தது.[21]

பெஸ்து கட்டளை கொடுக்க, "பவுல் கொண்டு வரப் பட்டார்." வேறுபாடானது திகைப்புக்குரியதாயிருந்தது. கவர்ச்சியான அக்கூட்டத்தின் முன்பாக அப்போஸ்தலர் தமது மங்கிய சிறை உடையுடனும், நகருகையில் ஒலியெழுப்பும் விலங்குகள் பூட்டிய கைகளுடனும் நின்றார் (26:29). அவர் பரிதாபத்திற்குரிய ஒரு உயிரினம் போல் தோன்றினார்: அவரது உடலில் பல தழும்புகள் இருந்தன, அவரது உடலானது பல பத்து ஆண்டுகளின் உபாதைகளினால் மற்றும் தவறாக நடத்தப் பட்டிருந்ததால் வளைந்து காணப்பட்டது. அதாவது அவரது கண்களில் உற்றுப் பார்க்கும் வரையிலும் ஒருவர் அவர்மீது பரிதாபமுள்ளவராகவே இருப்பார் - அவரது கண்களோ உள்ளார்ந்த சுவாலையினால் ஒளிர்ந்து கொண்டிருந்தன.

அந்த அப்போஸ்தலருக்காக வருத்தப்பட வேண்டாம். கம்பீரமான பார்வையாளர்கள் அல்ல, இவரே காட்சியில் ஆதிக்கம் செலுத்தினார். அவர்களுடைய பெயரல்ல, இவரு டைய பெயரே அவ்வீட்டாருடைய வார்த்தையாயிற்று. அவர்களல்ல, இவரே அந்நிகழ்ச்சியின் மிக முக்கியமான மனிதராக (VIP யாக) இருந்தார். "அவர்களது வாழ்வானது பவுல் என்ற பெயருடைய சிறைக் கைதியின் வாழ்வில் குறுக்கிட்டதாலேயே நாம் அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டி ருக்கின்றோம் என்று அறிந்தால் அவர்கள் திகைப்படைய மாட்டார்களா?" என்று யாரோ ஒருவர் கூறியிருக்கின்றார்.

*பணக்காரர்கள் மற்றும் புகழ் மிக்கவர்களின் வாழ்க்கை முறைகள் பற்றி ஒருபொழுதும் பொறாமை கொள்ள வேண்டாம். (மாற். 10:42-44ஐக் காணவும்.) வெளிக்காட்டானது விரைவில் கடந்து செல்கின்றது; "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் கடந்து செல்லுகின்றன." இதற்கு மாறாக, "தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவரோ என்றென்றைக்கும் பிழைத்திருக்கின்றார்" (1 யோவா. 2:16, 17).*

*எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் உள்ளபடி, பவுல், "கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்" என்று "தைரியம் கொண்டு" கூறியிருக்க முடியும் (எபி. 13:6). அந்த அப்போஸ்தலரை அவ்வளவு தைரியமாய் இருக்கச் செய்தது எது? அவர் தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் கர்த்தரைச் சந்தித்தார்; அவர் கர்த்தரிடத்திலிருந்து கட்டளை பெற்றிருந்தார்; அவர் தமது வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புவித்திருந்தார். இவ்விதமாக அவர் எந்த ஒரு விஷயத்தையும் எந்த ஒரு நபரையும் தைரியமாய் எதிர்கொள்ள முடிந்தது.*

*அடுத்த பாடத்தில் நாம், அந்தக் கூடத்தில் இருந்த பார்வையாளர்களின் நாடகம் போன்ற காட்சிக்கு மறுபடியும் திரும்புவோம். முதலாவது, பவுலின் வாழ்க்கையில் உயிர்த்தெழுதலின் வல்லமையை வலியுறுத்த நாம் விரும்புகின்றோம்.*

## தைரியமான அப்போஸ்தலர்

*நாம் படிக்கும் இவ்வரலாறு நடந்த வேளையில் பவுல் எதை எதிர்நோக்க வேண்டியிருந்தது என்பதை நாம் மறுகண்ணோட்டமிடுவதில் தொடங்குவோம். அவரது விசாரணைகள் ஏழு தலைப்புகளின் கீழ் சுருக்கி உரைக்கப்பட முடியும்:[22] (1) தகுதியற்ற சிறைவாசம்: பவுல் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவர் சிறையில் இருந்தார். (2) விளக்கமற்ற தாமதம்: "இரண்டு வருஷம் சென்ற பிறகு ..." என்று நாம் வாசிக்கின்றோம். 24:27ல் உள்ள இவ்வார்த்தைகளைப் படிப்பதற்கு ஓரிரு வினாடிகளே ஆகின்றது, ஆனால் வாழ்வதற்கு இருபத்து நான்கு மாதங்கள் ஆயின. பவுல் ரோமாபுரிக்குச் செல்வார் என்று இயேசு வாக்குத்தத்தம் செய்திருந்தார் (23:11)*

ஆனால் இரண்டு வருஷம் தாமதமாகும் என்பதைக் குறிப்பிடவில்லை. *(3) கடுமை குறைவற்ற தாக்குதல்:* இரண்டாண்டு காத்திருந்த காலமானது யூதர்களின் வெறுப்புணர்வை மென்மையாக்கவில்லை. தொடர்ந்து அவர்கள் பவுலைக் கொல்லுவதில் விருப்பமாகவே இருந்தார்கள். *(4) உண்மையற்ற குற்றச்சாட்டுகள்:* பவுலுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் கற்பனையானவைகளாகவோ அல்லது சரியற்றவைகளாகவோ இருந்தன. *(5) பண்பற்ற தன்னலப் பயன்பாடுகள்:* பேலிக்ஸ் முதலில் இலஞ்சம் வாங்கப் பவுலைப் பயன்படுத்த முயன்றார்; பிறகு அவர் யூதர்களைச் சமாதானப்படுத்தப் பவுலைப் பயன்படுத்த முயன்றார். பெஸ்துவும் கூட யூதர்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக பவுலைப் பயன்படுத்த முயன்றார். *(6) தகுதியற்ற நியாதிபதிகள்:* சனகெரீப் சங்கத்தார், பேலிக்ஸ், பெஸ்து மற்றும் அகிரிப்பா ஆகியோரைக் காட்டிலும் அதிகமான வெறுப்பூட்டக் கூடியவர்களைக் கற்பனை செய்வது கடினமாயிருக்கும்; இருப்பினும் இவர்கள் தான் அவரை நியாயந்தீர்க்க வேண்டுமென நினைத்துக் கொண்டார்கள். *(7) நிச்சயமற்ற எதிர்காலம்:* "செசரியாவை விட்டே வெளியேற முடியாமல் இருக்கும்போது, நான் ரோமாபுரி சென்று பிரசங்கிப்பது எப்படி'' என்று பவுல் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். அவர் இராயருக்கு அபயமிட்ட பிறகும் கூட பேரரசருக்கு முன்பாகத் தாம் விசாரிக்கப்படுவது பற்றி நிச்சயமற்றவராகவே இருந்தார்.

**அவருடைய தைரியம்**

ஏற்றதாயிருந்திராத இந்த விசாரணைகள் யாவற்றிலும் பவுலைத் தாங்கி நிறுத்தியது எது? அவருடைய விசுவாசமேயாகும். ''பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத் தக்கதான" விசுவாசம் என்பதே அவரது ''கேடகமாய்'' இருந்தது (எபே. 6:16). அவர் தமது தேவன்மேல் விசுவாசம் கொண்டிருந்தார். கடைசியில் அவர் அகிரிப்பா அரசரின் முன்பாக நின்ற பொழுது, "ஆனாலும் தேவ அநுக்கிரகம் பெற்று, நான் இந்நாள் வரைக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சி கூறி வருகிறேன்" (அப். 26:22அ) என்று கூறினார். பவுல், "தேவன் நம்முடைய பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31; NCV) என்று

*எழுதினார். அவர் ஒரு நாளில் ரோமாபுரியில் பிரசங்கிப்பார் என்ற இயேசுவின் வாக்குத்தத்தத்தின் மீது விசுவாசமுள்ளவராய் இருந்தார் (அப். 23:11). இருப்பினும் ஒரு சிறப்பான வழியில், அவர் உயிர்த்தெழுதலில் கொண்டிருந்த விசுவாசமே அவர் செயல்படுவதற்குத் தைரியத்தைக் கொடுத்தது என்று நான் ஆலோசனை கூறுவேன். அவர் தமது இடர்ப்பாடுகளுக்கான காரணத்தை அவர் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம், ஆனால் அவர் பின்வருவதைப் புரிந்து கொண்டார்: அவரது மீட்பர் உயிருள்ளவராக, செயல்படுபவராக, கட்டுப்படுத்துபவராக இருந்தார்! அவருக்கு (பவுலுக்கு) என்ன நடந்தாலும் - இராயரின் கைகளில் அவர் கடைசியில் இறக்க நேர்ந்தாலும் - எல்லாம் சரியாகும்; உயிர்த்தெழுதல் அதை உத்தரவாதப் படுத்துகின்றது! அவர் கொரிந்தியருக்கு எழுதியபடியாக,*

> *கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரை யடைந்தவர்களில் முதற்பலனானார் (1 கொரி. 15:20).*
>
> *நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொரி. 15:57).*

**நம்முடைய தைரியம்**

*பவுலினுடைய துன்பங்களை நான் அட்டவணைப் படுத்தியபோது, உங்களில் பலர் உங்களுடையவைகளை அவற்றுடன் தொடர்பு படுத்தியிருக்க முடியும். உங்களில் சிலர் உங்கள் சொந்தமானதல்லாத தவறுகளின் மூலம் கட்டுப் படுத்தப்பட்டிருக்கலாம். ஒருவேளை, ஒரு உடல் ஊனத்தி னால் அல்லது வேலை ஒன்றின் தடையினால் முன்னேற்றத் திற்கான நம்பிக்கையற்ற நிலையில் நீங்கள் கட்டுப்படுத்தப் பட்டிருக்கலாம். விளக்கப்படுத்தப்பட முடியாத தாமதங் களினால் சிலர் அமைதியில்லாது ஆகி விடுகின்றார்கள். உங்கள் வாழ்வில் நீங்கள் சில நேர்மறையான முன்னேற்றங்களுக்காகக் காத்திருந்திருப்பீர்கள் - அது ஒரு பொழுதுமே வராததாகக் காணப்படுகின்றது. சிலர் கடுமை தணியாத தாக்குதலுக்கு உட்படுகின்றார்கள். விரோதி ஒருவரைச் சாந்தப்படுத்த உங்களால் முடிந்த எல்லாவற்றையும் நீங்கள் செய்துவிட்டீர் கள், ஆனால் அவர் ஒப்புரவாகுவதில்லை என்று தீர்மானமாக*

*இருக்கின்றார். சிலர் உண்மையற்ற குற்றச்சாட்டுகளுக்குப் பலியானவர்களாய் இருக்கின்றார்கள். உங்கள் பெயரை சுத்தப்படுத்துவதற்கான உங்கள் முயற்சிகள் யாவும் தீர்ந்து போய் விட்டன. அவைகளில் சில தவறான பயன்பாட்டுக்கு இலக்காகி விட்டன. மற்றவர்களால் பயன்படுத்திக் கொள்ளப் படுவது என்றால் என்ன என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர் கள்; உங்கள் நண்பர், முதலாளி அல்லது துணைவர் ஒருவரால் நீங்கள் தவறாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றீர்கள். சிலர் விமர்சனம் செய்யத் தகுதியற்றவர்களால் விமர்சனம் செய்யப்பட்டுள்ளீர்கள். ஒருவேளை நீங்கள் நிறைவேற்றியவை கள் பற்றி அவர்கள் பொறாமையடைந்திருக்கலாம். நாம் அனைவருமே நிச்சயமற்ற ஒரு எதிர்காலத்தை எதிர் நோக்குகின்றோம் (யாக். 4:14அ).*

*சோதனை வேளைகளில் பவுலைப் போல நாம் எவ்விதம் தொடர்ந்து செல்ல முடியும்? விசுவாசமே திறவுகோலாக இருக்கின்றது. "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1 யோவா. 5:4ஆ). பின்வரும் வார்த்தைகளை நீங்கள் அடிக்கடி காணும் இடத்தில் வையுங்கள்: "அறியாதவைகளை நீங்கள் முகமுகமாய் எதிர்கொள்ளும்போது அறிந்தவர்மேல் சார்ந்திருங்கள்." உங்களைச் சுற்றியுள்ள வாழ்வு ஏன் இடிந்து விழுந்தது என்று நீங்கள் அறியாமல் இருக்கலாம், ஆனால் பின்வருவதை நீங்கள் அறியமுடியும்: தேவன் உங்களை நேசிக்கின்றார் மற்றும் உங்களுக்கு உதவி செய்வார்; மற்றும் உங்களுக்கு நடக்கின்ற யாவும் நன்மைக்கு ஏதுவாக இருக்கும் (1 யோவா. 4:10; எபி. 13:6; ரோமர் 8:28). இயேசு உயிருள்ளவராய் இருந்து உங்கள் வாழ்வில் செயல்படுகின்றார் என்பதையும் நீங்கள் அறியமுடியும்: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" (1 பேது. 1:3, 4). உங்கள் நித்திய இல்லத்திற்கு அழைத்துச் செல்ல அவர் மறுபடியும் ஒரு நாளில் திரும்பி வருவார் என்று நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.*

*... கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ள வேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவமையையும் தரித்துக் கொள்ளும் போது, ''மரணம் ஜெயமாக விழுங்கப் பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்" (1 கொரி. 15:51-54).*

*உங்கள் வாழ்வில் ஒவ்வொன்றும் தவறுகின்ற பொழுது, உயிர்த்தெழுதலின் நிச்சயத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!*

## முடிவுரை

*இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றி எண்ணும்போது, நீங்கள் பெஸ்துவைப்போல் குழப்பமடைந்திருக்கின்றீர்களா அல்லது பவுலைப்போல தைரியமாய் இருக்கின்றீர்களா? உயிர்த்தெழுதல் என்பது உங்களைப் பொறுத்தமட்டில், "ஒத்துவராத கருத்தாக ... மரித்துப் போன இயேசு என்னும் ஒரு மனிதன் உயிரோடிருக்கிறானென்று பவுல் சாதித்ததைக் குறித்த தர்க்க விஷயமாக" இருக்கின்றதா? அல்லது உயிர்த்தெழுதல் என்பது உங்கள் வாழ்வையே மாற்றிய ஜீவனுள்ள நம்பிக்கையாய் இருக்கின்றதா? "கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா"; "... மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே?" (1 கொரி. 15:14, 32). இதற்கு மாறாக, கிறிஸ்து உயிர்த்தெழுப் பப்பட்டிருக்கின்றார் என்னும் போது, இது ஒவ்வொன்றையும் மாற்றுகின்றது!*

*நமது அடுத்த பாடத்தில், பவுல் வசதிமிக்க பார்வையாளர்களிடத்தில், "தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியமென்று நீங்கள் எண்ணுகிறதென்ன?" என்று கேட்பதை*

*நாம் கேள்விப்படப் போகின்றோம். தேவன் ஒன்றுமில்லாமையில் இருந்து ஒரு உலகத்தை உண்டாக்க முடிந்தது என்றால், தேவன் ஆதாமுக்குள் ஜீவனை வைக்க முடிந்தது என்றால், தேவன் பவுலைப் போன்ற நபரை மாற்ற முடிந்தது என்றால்,[23] இயேசுவை மரித்தோரில் இருந்து எழுப்புவது என்பது அவருக்கு எவ்வளவு சுலபமானதாக இருந்திருக்கும்!*

*"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களின் முதற்பலனானார்'' (1 கொரி. 15:20). இந்த சத்தியமானது உங்கள் ஆத்துமாவை நிரப்பி - பவுலை மாற்றுருவாக்கி சக்தியூட்டியது போலவே - உங்கள் வாழ்க்கையையும் மாற்றட்டும்! உயிர்த்தெழுந்த கர்த்தருக்கு உங்களை முழுமையாக ஒப்புக் கொடுங்கள்.[24] உங்களின் நல்ல மற்றும் மோசமான நாட்கள் யாவற்றிலும் அவருடன் கூட நடவுங்கள்!*

## *பிரசங்கக் குறிப்புகள்*

*நமது வாழ்வில் உயிர்த்தெழுதலின் நடைமுறை வல்லமையானது இந்தப் பாடத்தில் வலியுறுத்தப்படுவதால், உயிர்த்தெழுதலின் ஆதாரங்கள் அல்லது உயிர்த்தெழுதல் பற்றி வேதாகம உபதேசத்தின் மற்ற அம்சங்கள் ஆகியவற்றில் நான் நேரத்தைச் செலவழிக்கவில்லை. உயிர்த்தெழுதல் பற்றிய ஒன்றிரண்டு துணைப்பாடங்களைப் பிரசங்கிக்க நீங்கள் விரும்பலாம். 1 கொரிந்தியர் 15க்கான புறக்குறிப்பொன்று "இயேசுவின் மூலம் வெற்றி!" என்ற தலைப்பில் என்னிடத்தில் உள்ளது. இது "புதிய ஏற்பாட்டு ஆராய்ச்சி" என்ற தலைப்பில் (ஜுலை 1993, பக்கம் 16) வெளியான இன்றைக்கான சத்தியம் ஆங்கில இதழில் இருக்கின்றது. உயிர்த்தெழுதலின் ஆதாரங்களை முன்வைக்கும் இரண்டு பிரசங்கங்கள் ஜனவரி 1983ல் வெளியான The Preacher's Periodical (இன்று, Truth for Today) இதழிலும் மற்றும் ஏப்ரல் 1988 Truth for Today இதழிலும் வெளியாயின. உயிர்த்தெழுதல் பற்றிய மற்ற பிரசங்கங்கள் ஆகஸ்ட் 1983, நவம்பர் 1985, ஜனவரி 1986 மற்றும் 1991 டிசம்பர் இதழ்களில் வெளியாயின.*

குறிப்புகள்

[1]"விசாரணைகள்" என்ற வார்த்தையை நான் மேற்கோள் குறிகளுக்குள் இட்டிருக்கின்றேன், ஏனென்றால் ஆலோசனைச் சங்கத்தின் அறைகளுக்குள் நடந்த முழுத் தோல்வியை சரியான விசாரணை என்று நினைப்பது கடினமாகும், மற்றும் அகிரிப்பாவின் முன்னிலையில் பவுலின் தற்காப்பு வாதமானது உண்மையில் ஒரு விசாரணையாக இருக்கவில்லை. இருந்த போதிலும், இவைகளை "விசாரணைகள்" என்றுதான் கல்வியாளர்கள் பலர் குறிப்பிடுகின்றார்கள். ஒவ்வொன்றிலும் பவுல் தமது உயிருக்காக இல்லாதிருந்தால், தமது விசுவாசத்திற்காக விசாரணை செய்யப்பட்டார். [2]Lloyd J. Ogilvie, *The Communicator's Commentary,* vol. 5, *Acts* (Dallas: Word Publishing, 1983), 339-40. [3]இவர் இரண்டாம் ஏரோது அகிரிப்பா ஆவார். "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3" இதழில் உள்ள வரைவு அட்டவணையைக் காணவும். அந்த இதழில் அவர் சுருக்கமாகக் குறிப்பிடப் பட்டுள்ளார். [4]இந்த ஏரோது முதலாம் ஏரோது அகிரிப்பா ஆவார். அவரை பற்றி "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3" இதழில் உள்ள பிரசங்கத்தைக் காணவும். [5]ஏரோதின் பெயருக்கு இன்னமும் மதிப்பு இருந்தது. "ஏரோதியர்கள்" என்று அழைக்கப்பட்ட மார்க்க அரசியல் குழுவொன்று நாட்டில் இருந்தது (மாற். 3:6; 12:13 ஆகியவற்றைக் காணவும்). [6]அடுத்த பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, யூதேயா நாட்டின் மீது ஏரோது ஆட்சி செலுத்தவில்லையென்றாலும் கூட, எருசலேமைக் காவல் செய்யும் பொறுப்பையும், பிரதான ஆசாரியரை நியமிக்கும் பொறுப்பையும் அவருக்கு ரோமாபுரி கொடுத்திருந்தது. பெஸ்துவின் அறைகூவலை அகிரிப்பா சுலபமானதாகவோ அல்லது கடினமானதாகவோ ஆக்க முடிந்திருந்தது. [7]தேசாதிபதிக்கும் அரசருக்கும் இடையில் நடைபெற்ற தனிப்பட்ட உரையாடலைப் பற்றி "லூக்கா எவ்விதம் அறிந்தார்" என்று தேவபக்தியற்றவர்கள் மீண்டும் ஒருமுறை வியப்படைகின்றார்கள். கிறிஸ்தவத்தின் மீது பரிதாப உணர்வு கொண்டிருந்த பணியாளர்கள் அங்கு இருந்திருக்க வாய்ப்புள்ளது (பிலி. 4:22ஐக் காணவும்). மிக முக்கியமாக, லூக்கா ஏவப்பட்டிருந்தார் - அரண்மனை அறைகளில் என்ன நடக்கிறது என்பதைத் தேவன் அறிந்துள்ளார் (2 இரா. 6:12). [8]எருசலேமில் என்ன நடந்தது என்பது பற்றிய லீசியாவின் அறிக்கையுடன் இதை ஒப்பிடவும் (அப். நட. 23:25-30க்கான குறிப்புகளைக் காணவும்). [9]கொலை, பெரிய திருட்டு அல்லது இவை போன்ற குற்றச்சாட்டுகளைப் பெஸ்து எதிர்பார்த்திருந்திருக்கலாம். [10]யூதப் பின்னணியுள்ள ஒருவரிடத்தில் பெஸ்து "தங்களுடைய சொந்த மார்க்கம்" என்று கூறியது ஏன்? ஒருவேளை அவர் தம்முடைய அரச விருந்தினரை யூதத் தலைவர்களின் அநீதியைக் கொண்டு அடையாளப்படுத்த விரும்பாதிருந்திருப்பார். ஒருவேளை நாவு தவறி அப்படிச் சொல்லியிருப்பார்.

[11]"மார்க்கம்" என்றுள்ள இவ்வார்த்தையானது அப். 17:22ல் "தேவதா பக்தி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. இவ்வார்த்தை "அசுத்த ஆவிகளை வழி படுதல்" என்ற நேரடி அர்த்தம் கொண்டதாகவே இருக்கின்றது, மற்றும் இது "மூடநம்பிக்கை" என்று KJVயில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் 17:22க்கான குறிப்புகளைக் காணவும். பெஸ்து தம்முடைய யூத விருந்தாளியை வேண்டுமென்றே அவமானப்படுத்தியிருக்க மாட்டாரென்பதால், "மார்க்கம்" என்பதே சிறந்த மொழிபெயர்ப்பாயிருக்கக் கூடும். இருப்பினும் - அப். 17ல் பவுல் கொண்டிருந்தது போலவே - இவர் சிந்தனையில் இரட்டை அர்த்தம் இருந்திருக்கவும் வாய்ப்புண்டு. [12]நாமகரணக் கூட்டப் பிரசங்கியார்கள், "இயேசு உண்மையில் உயிர்த்தெழுந்தாரா இல்லையா என்பது முக்கியமானதல்ல; ஆதி

*கிறிஸ்தவர்கள் அவர் உயிர்த்தெழுந்தார் என்று நம்பினார்கள் என்பதே முக்கியமானது" என்று கூறுவதை நான் கேட்டிருக்கின்றேன்.* [13]Albert Barnes, *Acts*, Notes on the New Testament (Grand Rapids, Mich.: Baker Book House, 1953), 344. [14]*பவுல் பலஸ்தீனத்தை விட்டு வெளியேறும் வரை ரோம அரசால் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இராயருக்கு அபயமிட்டார் என்று ஒரு காரணம் உள்ளதென்று இவ்வார்த்தைகள் ஆலோசனை தெரிவிக்கின்றன. இது பவுலின் சிந்தையில் இருந்ததோ இல்லையோ, தேவனுடைய அருளிரக்கத்தில், பவுல் இராயருக்கு அபயமிட்டது நடைமுறை விளைவாக இருந்தது.* [15]*ரோமச் சட்டச் சுருக்கத்தின்படி, கைதியொருவர் உயர்நீதி மன்றத்திற்குக் காவலில் அழைத்துச் செல்லப்படும் போது, எழுதப்பட்ட அறிக்கையொன்று அனுப்பப்பட வேண்டும்.* [16]*"ஆடம்பரத்துடனே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள phantasia என்ற கிரேக்க வார்த்தையானது "காட்சியளித்தல், வெளியாக்குதல்" என்று அர்த்தப்படுகின்றது. இவ்வார்த்தையிலிருந்து தான் நாம்* "fantasy" *மற்றும்* "fantastic" *என்ற வார்த்தை களைப் பெறுகின்றோம். இது பகட்டான உடை உடுத்திக் காட்சி தருதல்* (pageantry) *என்பதைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது எனவே இவ்வசனத்தில்* "pageantry" *என்ற வார்த்தை சில மொழிபெயர்ப்புகளில் தருவிக்கப்பட்டுள்ளது.* [17]Charles R. Swindoll, *The Strength of an Exacting Passion* (Anaheim, Calif.: Insight for Living, 1992), 125-26. [18]*சனதெரீன் சங்கத்தாரும் இங்கிருந்ததாகச் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர், ஆனால் அதற்கு வாய்ப்பில்லை. அவர்கள் பல நாட்களுக்கு முன்னதாகவே வீடு திரும்பியிருப்பார்கள் (13 மற்றும் 14ம் வசனங்களில் காலம் கடத்தலைப் பற்றிய குறிப்பைக் கவனியுங்கள்). இருப்பினும், யூதர்கள் பலர் அப்பகுதியில் இருந்த செல்வாக்குள்ள மனிதர்களுடன் இருந்திருக்க வாய்ப்புண்டு. செசரியா பலஸ்தீனத்தில் தானே இருந்தது.* [19]William Barclay, *The Acts of the Apostles*, The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1976), 175. [20]*ஐந்து சேனாதிபதிகள் செசரியாவில் நியமிக்கப்பட்டிருந்ததாக யோசிப்பஸ் அவர்கள் கூறினார். இந்த அதிகாரிகள் ஒவ்வொவரும் ஆயிரம் பேர்களுக்கு அதிகாரியாய் இருந்தார்கள் (இந்த இதழில் அப். 21:31க்கான குறிப்புகளைக் காணவும்).*

[21]*இச்சொற்றொடர்கள்* G. *கேம்ப்பெல் மார்க்கன் அவர்களால் பயன்படுத்தப் பட்டுள்ளன.* [22]*இந்த ஏழு கருத்துக்களும், ரிக் ஆட்ச்லீ அவர்களால் "பக்குவப்படுத்தப் பட ஒப்புக் கொடுத்தல்" என்ற பிரசங்கத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.* [23]*இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கான ஆதாரம் தேவைப் படுமானால் இவ்விடத்தில் சேர்க்கப்படலாம். பவுலுக்குள் நடந்த வியத்தகு மாற்றமே இயேசு உயிருடனிருக்கிறார் என்பதற்கு ஆதாரமாக உள்ளது.* [24]*கர்த்தருடைய அழைப்பானது கூறப்படுகையில் (மத். 11:28-30) கேட்பவர்களின் தேவைக்கேற்ற பயன்பாடுகள் இவ்விடத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும்.*